[1987 மார்ச் 31

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் தொழிலாளர் துறை ஆணையர் இந்த ஒழுங்கு நடவடிக்கையைக் கைவிட வேண்டுமென்று எழுதியிருப்பதாகவும் அதன் பின்பும் வாரியம் ஒழுங்கு நடவடிக்கையைத் தொடருவதாகவும் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் தொழிலாளர் ஆணையர், அந்த நடவடிக்கையைக் கைவிடவேண்டுமென்று சொல்லவில்லை என்று வாரியம் தெரிவிக்கிறது. மேலும் மின்சார வாரியம், விளம்பரத் திற்காகப் பணம் வாங்கக்கூடாது என்று போட்ட உத்தரவின்மீது தொடுக்கப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் மின்சார வாரியத்தினுடைய உத்திரவு நியாயமானது என்று சொல்லி யிருக்கிறது. அதன்மீது மேல் முறையீடு (Writ Appeal) செய்திருக்கிறார்கள். அது நிலுவையில் இருக்கிறபோது எந்த அபிப்பிராயமும் என்னால் சொல்லமுடியாது.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிப் பிரகாரம் இரண்டு கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அமருங்கள்.

(முற்பகல் 10-10)

(ஈ) திருக்கோயில் முதுநிலைப் பணியாளர் சங்கத்தினர் உண்ணாவிரதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா அவர்கள் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர் சார்பாக, திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு திருக்கோயில் முதுநிலைப் பணியாளர் சங்கம் அதன் கோரிக்கைகளை வலியுறுத்தி, திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் முன்பும் மற்றும் தமிழகத்தில் பல இடங்களிலும் உண்ணாவிரதம் இருப்பதால்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாடு முதுநிலை திருக்கோயில் பணியாளர்கள் சங்கம், ஆலயப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு, அகவிலைப்படி, மற்றும் கருணைத்தொகை வேண்டி 2—2—1987-ம் நாள் முதல் தொடர் உண்ணாவிரதம் போன்ற கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

2. இத்தமிழ்நாடு முதுநிலைத் திருக்கோயில் பணியாளர்கள் சங்கம் அரசினால் அங்கீகாரம் பெறப்பட்டதன்று. மேலும், ஆலயப் பணியாளர்களின் பணி நியமனத்திற்கான கல்வித் தகுதிகள் ஆகியவை அரசு பணியாளரைப் போன்று வரையறுக்கப்பட்டவை அல்ல. மேலும் அவர்களது பணியின் தன்மையும், அரசு பணியாளரைப் போன்றவையல்ல. மேலும், அவர்களது கல்வித் தகுதி, பணியின் தரம் வெகுவாக அரசுப் பணியாளர்களிடமிருந்து மாறுபட்டுள்ளன. ஆனால் ஆலய ஊழியர்கள் வேறு பல சலுகைகள் பெறுகின்றனர். உதாரணமாக, திருவிழாக் காலங்களில் மரியாதை பெறுதல், ஓய்வு பெறும் வயது 60 போன்றவையாகும். இது தவிர, ஆலயப் பணியாளர்களுக்கு ஆண்டு தோறும் ஒரு மாத ஊதியம் போனசாக வழங்கப்பட்டு வருகிறது.

3. எனினும், இந்த அரசு முதன்முறையாக, இந்த நிலைமையை மாற்றி ஆலய ஊழியர்களுக்கும் சம்பள விகிதங்கள் நல்ல முறையில் அமைக்கப்பட வேண்டும் என்று கருதி வெவ்வேறாக இருக்கும் அவர்களது சம்பள விகிதங்களைச் சீராக்க மூவர் குழு ஒன்று அறநிலையத்துறை ஆணையர் மூலம் நியமிக்கப்பட்டது. இவ்வாணையரின் குழு ஆலயப் பணியாளர்களின் ஊதிய விகித மாற்றம், இன்ன பிற பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையைச் சமர்ப்பித்தது. இப்பரிந்துரைகளைப் பரிசீலித்து முடிவெடுக்க ஆணையர் மற்றும் அரசு செயலாளரைத் தலைவராகக் கொண்ட

குழு ஒன்றை அரசு நியமனம் செய்தது. இக்குழு பன்முறை கூடி ஆணையரலுவலக மூவர் குழு அறிக்கையைப் பரிசீலனை செய்து தகுந்த பரிந்துரைகளை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது.

4. துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் நிலையில் நிர்வாக அதிகாரிகள் உள்ள திருக்கோயில் பணியாளர்களின் 125 ஊதிய விகிதங்களை 20 ஆகக் குறைத்து, 1—4—1986 முதல் அமுல் படுத்தி அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது. இவ்வாணைகளி னால் சுமார் 2,640 ஆலயப் பணியாளர்கள் பயனடைகின்றனர். இதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் ஆண்டொன்றுக்கு ரூ. 20 லட்சம் ஆகிறது.

5. தற்போது சீரமைக்கப்பட்டுள்ள திருந்திய சம்பள விகிதங் கள் முதல் நிலை முதல் நான்காம் நிலை வரையிலுள்ள திருக் கோயில் பணியாளர்களுக்குப் பொருந்தாது. ஆகையால், இப் பணியாளர்கள் பயனடையும் வகையிலும், அவர்களது அவா வினை நிவர்த்தி செய்யும் வகையிலும், கருணைப் பணிக்கொடை யாக ரூ. 200 (ரூபாய் இருநூறு மட்டும்) ஒரே தவணையாக அவர் களுக்கு வழங்கலாம் என்று இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையருக்கு அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

6. மேற்படி திருந்திய ஊதிய உயர்வு வடபழனி அருள்மிகு வடபழனியாண்டவர் ஆலயம், திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி ஸ்வாமி ஆலயம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் ஆலயம் மற்றும் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

7. இவை அல்லாமல், திருக்கோயில் பணியாளர்களுக்கு 1—3—1986 மற்றும் 1—5—1986 தேதிகளில் அரசுப் பணி யாளர்களுக்கு வழங்கப்பட்ட அகவிலைப்படி தவணைகளை முறையே 1—9—1986 மற்றும் 1—11—1986 தேதிகளிலும், 1—7—1986 முதல் 4 விழுக்காடாக அரசு ஊழியர்களுக்கு வழங்கப் பட்டுள்ள அகவிலைப்படி தவணையினை, 1—1—1987 லிருந்தும் முதுநிலை ஆலயப்பணியாளர்களுக்கு வழங்கப்பெறலாம் என்றும் அரசு அறிவித்துள்ளது.

1987 மார்ச் 31] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

8. மேலும் ஊதியத்தை நிர்ணயிக்கும்போது குறைந்த பட்ச பயன் (minimum fixation benefit) நிர்ணயிப்பது பற்றியும் அரசு ஆலோசித்து வருகிறது.

9. இதனைத் தொடர்ந்து தற்போது முதுநிலை திருக்கோயில் பணியாளர்கள் போராட்டத்தை நிறுத்தி சுமுகமான முறையில் பணியாற்றுகின்றனர் என்ற விபரமும் தெரிவிக்கப்படுகிறது.

(உ) ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மாணவர்களுக்கான முன் தேர்வு பயிற்சி மையக் கட்டடத்தில் பழுது.

திரு. க. பாரமலை: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, "நந்தனம், சென்னை-35-ல் இயங்கி வரும் ஐ.எப்.எஸ்., ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். பதவிகளுக்காக முன்தேர்வு பயிற்சி மையத்தில், வகுப்பு அறைகளும் விடுதியும், நிர்வாக அலுவலகமும் உள்ள கட்டடம் எந்த நேரமும் இடிந்து விழும் ஆபத்தான நிலையிருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்கள் ஐ.ஏ.எஸ். முதலிய தேர்வுகளை எழுதி வெற்றி பெற, தகுந்த பயிற்சி அளிப்பதற்காக, மாநில அரசு நடத்தி வரும், சென்னை முன் தேர்வு பயிற்சி மையம் தற்போது நந்தனத்தில், ஒரு தனியார் கட்டிடத்தில் உள்ளது. இம்மையத்தில் 60 மாணவர்கள் பயிற்சி பெறலாம் தற்பொழுது 46 மாணவர்களும் 6 மாணவிகளும் பயிற்சி பெற்று வருகின்றனர். மையம் தற்பொழுது உள்ள கட்டிடம் மிகவும் பாழடைந்த நிலையில் உள்ளதால், உயிருக்கும், சொத்துக்கும் ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது. கட்டிடச் சொந்தக்காரர் பழுது பார்க்கும் பணிகளைச் செய்ய முன்வரவில்லை. எனவே, அந்த மையத்தைத் தனியார் கட்டிடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு மாற்றுவது, தவிர்க்க முடியாத ஒன்றாகும். எனினும், மாற்று இடவசதி பெற இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகள் பயன